திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவாதங்கள் நீண்ட நேரம் நடந்திருக்கின்றன. அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதேமாதிரி, நான் அந்த விவாதத்திற்குள் செல்ல விரும்பவில்லை. நான் கேட்கிற கோரிக்கை, உடனடியாக அதுகுறித்து, நெடுவாசல் பிரச்சினையைப் பொறுத்தவரைக்கும், 'அனுமதிக்க மாட்டோம், அனுமதிக்க மாட்டோம்' என்று அரசு சொல்கிறது. அதை நாங்கள் வரவேற்கிறோம். ஆக, சட்டமன்றத்திலே ஒரு தீர்மானமாக அதை நிறைவேற்ற இந்த அரசு முன்வர வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி முன்வருகின்றபோது, எதிர்க்கட்சியாக இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகமும் அதற்கு முழு ஆதரவு தரக் காத்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, அந்த வகையில், நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அமைகிறேன். வணக்கம்.

முற்பகல் 11–20

(இ) மத்திய செம்மொழி தமிழ் ஆய்வு நிறுவனம், சென்னையில் தொடர்ந்து செயல்படவும், முழு நேர இயக்குநரை நியமிக்கவும் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு என்னவென்று சொல்லுங்கள். நீங்கள் சொல்லுங்கள்.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய செம்மொழி மத்திய தமிழ் ஆய்வு நிறுவனத்தை திருவாரூரிலே இருக்கக்கூடிய மத்திய பல்கலைக்கழகத்திலே ஒரு துறையாக மாற்ற மத்திய அரசு இன்றைக்கு நடவடிக்கை எடுத்திருப்பது தமிழக மக்களிடத்திலே ஒரு மிகப்பெரிய அதிர்வலையையும், அதிர்ச்சியையும் உருவாக்கியிருக்கிறது. 100 ஆண்டுகளுக்கு முன்பு பரிதிமாற் கலைஞரும், கால்டுவெல்லும் கண்ட கனவை நனவாக்கிய பெருமை தலைவர் கலைஞர் அவர்களுக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) அரை நூற்றாண்டு காலத்திற்கும் மேலாக தலைவர் கலைஞர் அவர்கள் வலியுறுத்தி, அதன் அடிப்படையில் 12–10–2004 அன்று அன்னை சோனியா காந்தி அவர்கள் தலைமையில் அமைந்திருக்கக்கூடிய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி பொறுப்பிலே இருந்தபோது மத்திய அரசு அதற்கான ஆணையை வெளியிட்டு தமிழுக்கு செம்மொழி

அந்தஸ்து தந்தது. அதுகாறும் கர்நாடக மாநிலம் மைசூரிலே இயங்கிவந்த அந்தச் செம்மொழி தமிழ் ஆய்வு நிறுவனம் தலைவர் கலைஞர் அவர்களுடைய பெரும் முயற்சியின் காரணமாகத்தான் 18–8–2007 அன்று சென்னையிலே துவக்கிவைக்கப்பட்டது. அதற்காக தலைவர் கலைஞர் அவர்கள் அன்றைக்கு முதலமைச்சராக இருந்தபோது பெரும்பாக்கத்திலே 17 ஏக்கர் நிலம் அமைத்து அதைச் சீரமைப்பதற்காக ஏறத்தாழ 145 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்து கொடுத்திருக்கிறார்கள். மேலும் சொல்ல வேண்டுமென்றால் தலைவர் கலைஞருடைய சொந்தப் பணத்தில் ஒரு கோடி ரூபாய் அளவிலே கலைஞர் மு. கருணாநிதி செம்மொழி அறக்கட்டளை என்ற ஒரு அறக்கட்டளையை நிறுவி அதன் வாயிலாகச் சிறந்த தமிழறிஞர்கள் தேர்வு செய்யப்பட்டு, குடியரசுத் தலைவருடைய செம்மொழி தமிழ் விருதுகள் வழங்கப்பட்டன. கடந்த ஆறு ஆண்டுகளாக அந்த விருதுகள்கூட வழங்கப்படாத நிலை இருக்கிறது. இந்நிலையிலே ஒரு தன்னாட்சி நிறுவனமாக நிதியை கையாளக்கூடிய, நிதியை பகிர்ந்தளிக்கக்கூடிய ஓர் அதிகாரம் பெற்ற ஒரு தன்னாட்சி நிறுவனமாக, தமிழை ஆய்வு செய்யக்கூடிய, அதன் மூலமாக பல்வேறு ஆய்வுகளை செய்யக்கூடிய அந்த நிறுவனத்தை, நிதி ஆயோக்கின் பரிந்துரையின் அடிப்படையிலே இன்றைக்கு இந்தியையும், சமஸ்கிருதத்தையும் தவிர மற்ற மொழிகளையெல்லாம் வேறு துறைகளுக்கு மாற்ற வேண்டுமென்ற அந்த பரிந்துரையின் அடிப்படையிலே, மத்தியில் இருக்கக்கூடிய B.J.P. *அரசு இந்திக்கும், சமஸ்கிருதத்திற்கும் மட்டும் முக்கியத்துவம் அளித்து, தமிழைப் புறந்தள்ளி, தமிழுக்கு இருக்கக்கூடிய தன்னாட்சி அதிகாரத்தைக் குறைக்கக்கூடிய வகையிலே பல்கலைக்கழகத்தில் வெறும் ஒரு துறையாக கொண்டுபோய் அதை வைப்பது என்பது ஒருக்காலும் தமிழக மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அந்நிறுவனத்திற்குத் தலைவராக பொறுப்பேற்றிருக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாகத் தலையிட்டு, இந்த முயற்சியை தடுத்து நிறுத்தி சென்னையிலே, தமிழகத்திலே அந்த மத்திய செம்மொழி தமிழ் ஆய்வு நிறுவனம் தொடர்ந்து நீடிப்பதற்கும், அதற்கு முழு நிதி உதவி வழங்கி, முழுநேர இயக்குநர் ஒருவரை நியமிப்பதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை இந்த நேரத்தில் வலியுறுத்தி, தேவைப்பட்டால் மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தி இந்த மன்றத்திலே ஒரு தீர்மானத்தை நீங்கள் கொண்டுவர வேண்டுமென்று கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்தை நான் வலியுறுத்தி அமர்கிறேன்.*

[2017 ஜூலை 11

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செம்மொழி தமிழ் ஆய்வு மத்திய நிறுவனம் சென்னை, தரமணி தமிழ்நாடு அரசு சாலைப் போக்குவரத்து நிறுவன வளாகத்தில் இயங்கி வருகிறது. இந்நிறுவனத்திற்கு தமிழ்நாடு அரசால் காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் பெரும்பாக்கத்தில், 17 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு, அந்த நிலத்தில் மத்திய அரசின் பொதுப் பணித் துறை வாயிலாக கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தமிழின் செவ்வியல் பரிணாமங்களை உலகத்திற்கு எடுத்துக்காட்டும் வகையில் முதுபெரும் தமிழறிஞர்களும், மூத்த ஆராய்ச்சியாளர்களும் இந்நிறுவனத்தின் வழியே உயர் ஆய்வு செய்து தமிழின் பெருமைகளைப் பறைசாற்றி வருகின்றனர். இந்நிலையில், திருவாரூரில் உள்ள தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகத்துடன் செம்மொழி தமிழ் ஆய்வு மத்திய நிறுவனத்தை இணைப்பதற்கான முயற்சி நடைபெறுவதாக இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார். மேலும், பத்திரிகைகளின் வாயிலாகவும் செய்திகளை நான் அறிந்தேன். இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் இதைப்பற்றிக் கேட்டிருக்கிறார்கள். இது தொடர்பாக செம்மொழி தமிழ் ஆய்வு மத்திய நிறுவனத்தின் ஆட்சிக் குழுத் தலைவர் என்ற முறையில் மத்திய அரசிடமிருந்து எவ்விதத் தகவலும் எனக்கோ, அல்லது தமிழக அரசுக்கோ இதுவரையில் வரப்பெறவில்லை. இதுசம்பந்தமாக மத்திய அரசிடமிருந்து தகவல் கிடைக்கப்பெற்ற பின் தமிழ்நாடு அரசு தேவையான தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(ஆ) நெடுவாசல், ஹைட்ரோகார்பன் திட்டம் நிறைவேற்றக்கூடாது என சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றக் கோரிக்கை—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசியதற்கு, நீங்கள் நேற்றையதினம் சொன்ன பதிலையே திரும்பவும் சொல்வதாக இருந்தால், ஏற்கெனவே அவரே அதை ஒத்துக்கொண்டிருக்கிறார். நீங்களும் நேற்று பேசினீர்கள். புதிதாக ஏதாவது சொல்வதாக இருந்தால் சொல்லுங்கள்.